# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டம்

---

(2002, மார்ச்சு மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, மார்ச்சு மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டம்

[2002 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.-ஓ 6/2002
4672

**அரசியலமைப்பினது 41 இ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள குறித்தசில பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஆட்களை அகற்றுவதற்காகப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்கு ஏற்பாடுசெய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

கருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

குறித்தசில பதவிகளை வகிப்போர், இச்சட்டத்தில் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக் கிணங்கவல்லாது அகற்றப் படுதலாகாது.

**2.** (அ) சட்டத்துறைத் தலைமையதிபதி ;

(ஆ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி,

என்ற பதவிகளை வகிப்போர், இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் தரப்பட்டுள்ளவாறான நடவடிக்கைமுறைக் கிணங்கவல்லாது அத்தகைய பதவிகளிலிருந்து அகற்றப்படுதலாகாது

2 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப் பட்ட பதவிகளை வகிப்போரை அகற்றுவதற்கான ஏதுக்கள்.

**3.** இரண்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்ற ஆட்கள், பின்வரும் ஏதுக்களுள் ஏதேனும் ஒன்றன்மீது அல்லது பலவற்றின்மீது பதவியிலிருந்து அகற்றப்படலாம் :—

(அ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கங்கொண்ட நீதிமன்றமொன்றினால் கடனிறுக்கவகையற்றவரென நீதித் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ;

(ஆ) சுகவீனம் காரணமாக அல்லது உடற்குறைபாடு அல்லது உளக்குறைபாடு காரணமாகப் பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராகவிருப்பதன்மேல் ;

(இ) ஒழுக்கக்கேட்டை, தேசத்துரோகத்தை அல்லது இலஞ்சத்தை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ;

(ஈ) துர்நடத்தைக்கு அல்லது ஊழலுக்குக் குற்றவாளியாகக் காணப்படுவதன்மேல் ;

(உ) தமது பதவிக்குரிய தத்துவங்களின் பாரதூரமான துர்ப்பிரயோகத்துக்குக் குற்றவாளியாகக் காணப்படுவதன்மேல்

(ஊ) கடமையைப் பாரதூரமாக அலட்சியஞ்செய்தமைக்குக் குற்றவாளியாகக் காணப்படுவதன்மேல் ;

(எ) பதவியில் பாரதூரமான பக்கச்சார்புக்குக் குற்றவாளியாகக் காணப்படுவதன்மேல் ; அல்லது

(ஏ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிவதன் மேல்.

3 ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஏ) ஆகிய பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதுக்களின் மீதான அகற்றுகை.

4. (1) மூன்றாம் பிரிவின் (அ), (ஆ), (இ), அல்லது (ஏ) ஆகிய பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதுக்களுள் ஏதேனுமொன்றன் மீது அல்லது பலவற்றின்மீது 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் ஏதேனுமொன்றை வகிப்பவரை அகற்றுதலானது, சனாதிபதியினாற் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தத்துவத்தைப் பிரயோகிக்கையில், சனாதிபதி, அவ்வுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதுக்களின் உள்ளமையை ஆதாரப்படுத்துவதற்கு சனாதிபதியின் அபிப்பிராயத்தில் போதியதாகவுள்ள வாய்மொழி மூலமான அல்லது எழுத்துமூலமான அத்தகைய சான்றைக் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும்.

குறித்தசில விடயங்களில் அகற்றுகைக்காகப் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

5. (1) மூன்றாம் பிரிவின் (ஈ), (உ), (ஊ) அல்லது (எ) ஆகிய பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதுக்களுள் ஏதேனுமொன்றின் மீது அல்லது பலவற்றின்மீது, 2 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் ஏதேனுமொன்றை வகிப்பவர் சனாதிபதியினால் அகற்றப்படுதலானது, பாராளுமன்ற உறுப்பினர்களின் சமுகமளிக்காதோருட்பட மொத்த எண்ணிக்

கையில் பெரும்பான்மையோரினால் ஆதாரவளிக்கப்பட்ட விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கான பாராளுமன்ற உரையொன்று முன்வைக்கப்படுவதன் பின்னராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகையவோர் உரையை முன்வைப்பதற்கான தீர்மானமெதுவும், சமூகமளிக்காதோருட்பட பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரினால் அத்தகைய தீர்மானம் பற்றிய அறிவித்தல் கையொப்பமிடப்பட்டாலொழிய, சபாநாயகரினால் ஏற்றுக் கவனிக்கப்படலாகாது.

(2) ஒன்றாம் உட்பிரிவுக்கிணங்கத் தீர்மானமொன்று கிடைக்கப் பெற்றதன்மேல் (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விசாரணைக் குழுவொன்று, எவ்வேதுக்கள்மீது அகற்றுகை நாடப்படுகின்றதோ சார்த்தப்பட்ட அவ்வேதுக்கள் தொடர்பில் அதன் முடிவெடுப்புகளை விசாரணைசெய்து அறிக்கையிடுவதற்கென அமைக்கப்படுதல் வேண்டும்.

6. ஐந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அமைக்கப்படும் குழுவானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— குழுவின் அமைப்பு.

(அ) விசாரணையானது, சட்டத்துறைத் தலைமையதிபதி தொடர்பானதாக இருக்குமிடத்து, குழுவானது மூன்று பேரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; இவர்களுள் பிரதம நீதியரசர் குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டுமென்பதுடன், மற்றைய இருவர், சட்டத் துறைத் தலைமையதிபதி என்ற பதவியை முன்னர் வகித்திருந்த ஆட்களிடையேயிருந்து அல்லது சட்டத்துறையில் உயர்நிலை எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து பிரதம அமைச்சரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் ஒருப்பாட்டுடன் சபாநாயகரினால் நியமிக்கப்பட்டவர்களாக இருத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) விசாரணையானது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தொடர்பானதாக இருக்குமிடத்து, குழுவானது மூன்று பேரைக் கொண்டிருத்தல் வேண்டும்; இவர்களுள் பிரதம நீதியரசரினால் பெயர்குறித்து

நியமிக்கப்படும் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டுமென்பதுடன், ஒருவர், அரசியலமைப்பின் 155அ என்னும் உறுப்புரையின் கீழ்த்தாபிக்கப்பட்ட பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற பதவியை வகிக்கின்ற ஆளாகவும், மற்றையவர், சட்ட அல்லது முகாமைத்துவ அல்லது பொது நிருவாகத் துறையில் உயர்நிலை எய்தியுள்ள ஆளொருவராகவும் இருத்தலும் வேண்டும் ;இவர் பிரதம அமைச்சரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் ஒருப்பாட்டுடன் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

தவிசாளர் அமர்வுகளில் தலைமை தாங்குதல்.

7. (1) குழுவின் தவிசாளர், குழுவின் எல்லா அமர்வுகளிலும் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) குழுவானது, அத்தகைய குழுவினால் நடாத்தப்படவுள்ள விசாரணைகள் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

குழுவின் பணிகள்.

8. (1) குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :–

(அ) 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பதவிகளுள் இரண்டிலொன்றை வகித்தவரை எவ்வேதுக்கள்மீது அகற்றுவதற்கு நாட்டப்படுகின்றதோ சார்த்தப்பட்ட அவ்வேதுக்களை விசாரணை செய்தலும் நுண்ணாய்வு செய்தலும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய பதவிகளை வகிப்பவர்களை அகற்றுவதற்காகச் சார்த்தப்பட்ட ஏதுக்கள் தொடர்பில் முடிவெடுப்புக்களைச் செய்தலும் அத்தகைய முடிவெடுப்புகளைச் சபாநாயகருக்கு உடனடியாக அறிவித்தலும்.

(2) குழுவின் முடிபு, பெரும்பான்மையோரின் முடிபாக இருத்தல் வேண்டும்.

9. குழுவானது, அதன் பணிகளை ஆற்றும் நோக்கத்துக்காக, பின்வரும் தத்துவங்களுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும் :— குழுவின் தத்துவங்கள்.

(அ) பெற்றுக்கொள்வதற்கு அல்லது விசாரணை செய்வதற்கு அவசியமென அல்லது விரும்பத்தக்கதென குழுவானது எண்ணக்கூடியவாறான, எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றையும் பெற்றுக்கொள்ளுதலும் ஏற்றுக் கொள்ளுதலும், அத்தகைய எல்லா ஆட்களையும் சாட்சிக்காரர்களாக விசாரணை செய்தலும் ;

(ஆ) எழுத்திலானதாயினுஞ்சரி வாய்மொழி மூலமானதாயினுஞ்சரி எவரேனும் சாட்சிக்காரரின் சான்று சத்தியத்தின் மீது அல்லது உறுதியுரையின்மீது கொடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்துதலும் (அத்தகைய சத்தியம் அல்லது உறுதியுரையானது, அவர் நீதிமன்றமொன்றில் சான்று கொடுத்தால் எடுத்தோதப்படும் அத்தகையதாகவிருக்கும்) அத்துடன் அத்தகைய சத்தியம் அல்லது உறுதியுரை குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் அலுவலரினால் அத்தகைய ஒவ்வொரு சாட்சிக்காரருக்கும் எடுத்தோதப்படுதலும் ;

(இ) இலங்கையில் வதிகின்ற எவரேனுமாளைச் சான்று கொடுப்பதற்கு அல்லது அவரது உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்கு குழுவின் ஏதேனும் விசாரணைக்கு வருகைதரும்படி கட்டளைவிட்டழைத்தலும், அவரை ஒரு சாட்சிக்காரராக விசாரணை செய்தலும் அல்லது அவரது உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்துதலும் ;

(ஈ) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் மற்றப்படிக்கு ஏல்தகவற்ற எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமானதான ஏதேனும் சான்றை ஏற்றல் ;

(உ) அத்தகைய விசாரணைக்கு அல்லது நுண்ணாய்வுக்கு அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்குப் பொது மக்களை அனுமதித்தல் அல்லது அதிலிருந்து தவிர்த்தல்.

குழுவின் முன்னர் சாட்சிக்காரர் களுக்குள்ள விடுபாட்டுரிமை.

**10.** (1) குழுவின்முன்னர் சான்று கொடுக்கின்ற ஆளொருவர், அத்தகைய சான்று தொடர்பில், ஒரு நீதிமன்றத்தின்முன்னர் சாட்சிக்காரரொருவரினாற் கொடுக்கப்படுகின்ற சான்று தொடர்பில் அத்தகைய நீதிமன்றத்தின்முன்னர் சான்றுகொடுக்கின்ற அத்தகைய சாட்சிக்காரர் எந்தச் சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அந்தச் சிறப்புரிமைகள் எல்லாவற்றுக்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஆளெவரும், அவ்வாளினால் குழுவுக்கு அல்லது குழுவின் முன்னர் கொடுக்கப்பட்ட எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான ஏதேனும் சான்று தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்குக்கு, குற்றவழக்குக்கு அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைக்கு ஆளாதலாகாது :

ஆயின், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளதெதுவும் –

(அ) தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறுக்கான குற்றவழக்கை அல்லது தண்டத்தைப் பாதித்தலோ அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது ;

(ஆ) தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின்கீழ் எவரேனும் சாட்சிக்காரருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கும் நோக்கங்களுக்காகக் குழுவின்முன்னர் சான்று கொடுக்கும் அச்சாட்சிக்காரரின் பெயரை அல்லது சான்றை அல்லது சான்றின் ஏதேனும் பாகத்தை வெளியிடுதலை அல்லது வெளிவிடுதலைத் தடைசெய்தலோ, அல்லது தடை செய்வதாகக் கருதப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது.

அழைப்புக்கட்டளை.

**11.** (1) குழுவினால் வழங்கப்படும் அழைப்புக்கட்டளை ஒவ்வொன்றும் குழுவின் தவிசாளரினது கைப்படவிருத்தல் வேண்டும்.

(2) அழைப்புக்கட்டளையில் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளிடம் அழைப்புக்கட்டளையை ஒப்படைப்பதன்மூலம் அல்லது அது செயல்முறைக்குகந்ததாகவிராதவிடத்து, அவ்வாள் கடைசியாக வசித்ததாக அறியப்பட்ட இடத்தில் அதனை விட்டுவிடுவதன் மூலம் அல்லது பதிவஞ்சல்மூலம் அதனை அனுப்புவதன்மூலம் அதனைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(3) எவ்வாளுக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்படுகின்றதோ அவ்வாள் ஒவ்வொருவரும், அதன்கண் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் குழுவின்முன்னர் வருகை தருதல் வேண்டுமென்பதுடன், அழைப்புக் கட்டளையின் தாற்பரியத்துக்கிணங்க, குழுவினால் அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு மறுமொழியிறுத்தலும் வேண்டும் அல்லது அவரிடமிருந்து தேவைப்படுத்தப்படுகின்றவையும் அவரது உடைமையில் அல்லது அதிகாரத்தில் உள்ளவையுமான அத்தகைய ஆவணங்களை அல்லது வேறு பொருட்களைக் காண்பித்தலும் வேண்டும்.

குழுவை அவமதித்தல்.

**12.** (1) குழுவின் முன்னிலையிலாயினுஞ்சரி அல்லது வேறு வகையாகவாயினுஞ்சரி, குழு தொடர்பாகச் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட செயலொன்று, அத்தகைய செயல் உயர்நீதிமன்றம் தொடர்பாகச் செய்யப்பட்டிருப்பின் அல்லது செய்யாதுவிடப்பட்டிருப்பின், அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதிகாரத்துக்கு அவமரியாதையான அவமதிப்புத் தவறொன்றாக அமைந்திருந்தால், குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதிகாரத்துக்கு அவமரியாதையாக அவமதிப்புத் தவறொன்றாக அமைதல் வேண்டும்.

(2) (அ) குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, இச்சட்டத்தின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட அழைப்புக்கட்டளையில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் குழுவின்முன்னர் தோன்றுவதற்குத் தவறுகின்ற ; அல்லது

(ஆ) சத்தியஞ்செய்விக்கப்படுதற்கு அல்லது உறுதியுரை கூறுவிக்கப்படுதற்கு மறுக்கின்ற அல்லது உரியமுறையயில் சத்தியஞ் செய்திருந்து அல்லது உறுதியுரை

கூறியிருந்து, குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமான தாகவுள்ள காரணமின்றி குழுவினால் விசாரணை செய்யப்படுகின்ற அல்லது நுண்ணாய்வு செய்யப் படுகின்ற கருமங்களையிட்டு அவரிடம் கேட்கப்படும் ஏதேனும் கேள்விக்கு மறுமொழியிறுக்க மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ; அல்லது

(இ) குழுவின் அபிப்பிராயத்தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, குழுவினால் அவருக்கு வழங்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்ட அறிவித்தலொன்றின் அல்லது எழுத்திலான கட்டளையொன்றின் அல்லது பணிப்பொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி யொழுக மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ; அல் லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டதன்மேல், குழுவின் அபிப்பிராயத் தில் நியாயமானதாகவுள்ள காரணமின்றி, அவரது உடைமையில், கட்டுப்பாட்டில் அல்லது அதிகாரத் தில் உள்ளதும், குழுவின் அபிப்பிராயத்தில் விசாரணை செய்யப்படுகின்ற அல்லது நுண்ணாய்வு செய்யப்படுகின்ற கருமங்களின் உண்மையை அறிவதற்கு அவசியமானதும் ஆன ஏதேனும் ஆவ ணத்தை அல்லது பொருளைக் குழுவுக்குக் காண் பிக்கவும் காட்டவும் மறுக்கின்ற அல்லது தவறுகின்ற.

எவரேனுமாள், குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதிகாரத்துக்கு அவமரியாதையான அவமதிப்புத் தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) குழுவின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அதிகாரத் துக்கு அவமரியாதையாகப் புரியப்படும் ஒவ்வோர் அவமதிப்புத் தவறும், அது, உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அதிகாரத்துக்கு அவமரியாதையாகப் புரியப்படும் அவமதிப்புத் தவறொன்று என்றாற்போன்று அந்நீதிமன்றத் தினால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒவ்வொரு தவறையும் விளங்குவதற்கும் உயர் நீதிமன்றத்துக்கு இத்தால் நியாயாதிக்கம் உரித்தாக்கவும் படுகின்றது.

(4) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதிகாரத்துக்கு அவமரியாதையான அவமதிப்புத் தவறுக்குக் குற்றவாளியாகவுள்ளாரெனக் குழுவானது தீர்மானிக்குமிடத்து, குழுவானது, அத்தகைய தீர்மானத்தைத் தருகின்ற சான்றிதழொன்றை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பலாம் ; அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும், சட்டத்துறைத் தலைமையதிபதியை அகற்றுதல் தொடர்பான விசாரணையொன்றின் அல்லது நுண்ணாய்வொன்றின் விடயத்திற்றவிர, குழுவின் தவிசாளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் ; சட்டத்துறைத் தலைமையதிபதியை அகற்றுதல் தொடர்பான விசாரணையின் அல்லது நுண்ணாய்வின் விடயத்தில் பிரதம நீதியரசர் அத்தகைய அவமதிப்புத் தவறை நீதிநெறிக் கவனத்துட் கொண்டு, உயர் நீதிமன்றத்துக்கெதிரான அவமதிப்புத் தவறு கையாளப்படும் முறையில் அத்தகைய தவறைக் கையாளுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு, உயர் நீதிமன்றம் நீதிநெறிக் கவனத்துட்கொள்வதற்குத் தகுதியானதென எண்ணக் கூடிய அவமதிப்புத் தவறொன்றைத் தண்டிப்பதற்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், (4) ஆம் உட்பிரிவின்கீழ் கையொப்பமிடப்பட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட சான்றிதழொன்றெனக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் ஆவணம் –

(அ) சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேலும் எண்பிப்பின்றி அத்தகைய சான்றிதழொன்றெனக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) சான்றிதழில் தரப்பட்டுள்ள தீர்மானமும் தீர்மானத்தில் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கும் குழுவினால் செய்யப்பட்டதென்பதற்கு சான்றாதல் வேண்டும்.

(6) குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அதிகாரத்துக்கு அவமரியாதையான சார்த்துப்பட்ட அவமதிப்புத் தவறொன்றைத் தண்டிப்பதற்காக இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், குழுவின் உறுப்பினரெவரும், அத்துடன் இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு சாட்சிக்காரராகக் கட்டளை விட்டழைக்கப்படுதலோ அல்லது விசாரணைசெய்யப்படுதலோ ஆகாது.

அலுவலர்களும் சேவையாளர்களும் குழுவுக்கு உதவுதல்.

**13.** இச்சட்டத்தின்கீழ் குழுவின் பணிகளை ஆற்றுவதில் அதற்கு உதவுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் உதவியை அது பெற்றுக்கொள்ளலாம்.

அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகவிருத்தல்.

**14.** குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்படும் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், குழுவினால் நடாத்தப்படும் ஒவ்வொரு விசாரணையும் அல்லது நுண்ணாய்வும் அச்சட்டக்கோவையின் கருத்துக்குட்பட ஒரு நீதிமுறை நடவடிக்கையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

தொடர்ச்சியிலிருந்து விடுபட்டுரிமை.

**15.** (1) குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும், அவமதிப்புத் தவறுக்காகவல்லாது, குழுவின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்படும் எவரேனும் அலுவலருக்கெதிராக அல்லது சேவையாளருக்கெதிராக அல்லது வேறேதேனும் வழியில் குழுவுக்கு உதவுகின்ற வேறெவரேனுமாளுக்கெதிராக, அத்தகைய உறுப்பினராக அல்லது அலுவலராக அல்லது சேவையாளராக அல்லது வேறு ஆளாக அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யாதுவிடப்படும் ஏதேனும் சட்டமுறையான செயலுக்காக, தொடுக்கப்படுதலாகாது.

(2) குழுவின் உறுப்பினரொருவர் அல்லது குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்படும் அலுவலர் அல்லது சேவையாளரொருவர், அவமதிப்புக்கான வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்காக அவசியமாகக்கூடியவாறு தவிர, இச்சட்டத்தின்கீழ் குழுவினால் நடாத்தப்படும் ஏதேனும் விசாரணையின்போது அல்லது நுண்ணாய்வின்போது குழுவினாற் பெறப்படும் ஏதேனும் ஆவணத்தை ஏதேனும் நீதிமன்றத்திற் காண்பிப்பதற்கு, அல்லது குழுவின் கவனத்துக்கு வருகின்ற ஏதேனும் கருமத்தை அல்லது காரியத்தை ஏதேனும் நீதிமன்றத்திற்கு வெளிவிடுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் குழுவினால் செய்யப்படும் ஏதேனும் முடிவெடுப்பு அல்லது அறிக்கை தொடர்பில் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

*அலுவலர்களும் சேவையாளர்களும் அட்டவணைப் படுத்தப்பட்ட அலுவலர்களாக விருத்தல்.*

**16.** குழுவுக்கு உதவுவதற்கென நியமிக்கப்படும் அலுவலர்களும் சேவையாளர்களும் இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*அகற்றுதலுக்கான தீர்மானம்.*

**17.** சபாநாயகர், 8 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி குழுவின் முடிவெடுப்புகளைப் பெற்றுக் கொண்டதன் மேலும், குற்ற முடிவெடுப்பு செய்யப்பட்டுள்ளவிடத்தும் எப்பதவி வகிப்பவர் தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டதோ அப்பதவியை வகிப்பவரை அகற்றுவதற்காகப் பாராளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தில் ஒரு தீர்மானம் என்ற வடிவத்தில் அத்தகைய முடிவெடுப்பை இடுதல் வேண்டும்.

*அகற்றுதல்.*

**18.** பதினேழாம் பிரிவின் நிதியதிகளின்படி ஒழுங்குப்பத்திரத்தில் அவ்வாறு இடப்பட்ட தீர்மானம் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைக்கிணங்கக் கையாளப்படுதல் வேண்டும். அத்தகைய தீர்மானத்துக்குச் சாதகமாக பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் (சமுகமளிக்காதோருட்பட) வாக்களிப்பதன் மேல் அத்தீர்மானம் தொடர்புறுத்தும் அத்தகைய பதவியை வகிப்பவர் சனாதிபதியினால் உடனடியாகப் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்ப பட்சத்தில் சிங் உரை மேலோ நிற்றல்.*

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோ*

**20.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"சட்டத்துறைத் தலைமையதிபதி" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டத்துறைத் தலைமையதிபதி என்ற பதவியை வகிப்பவர் என்று பொருளாகும் ;

"பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற பதவியை வகிப்பவர் என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.